**<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.</u>**

**<u>CC.No. 63/2021</u>**

2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18ம் நாள் புதன் கிழமை அரசு தரப்பு சாட்சி– 01, திருமதி. ஜெயந்தி என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 56வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.லதா, மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.ஜெயந்தி | வயது | : | |
| த.பெ/<br>க.பெ. | : | ராமசாமி | தொழில் | : | |
| ஊர் | : | | நிலை | : | PW1 |
| வட்டம் | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |

**( 1, 2, 4 எதிரிகள் ஆஜர்.3 வது எதிரி ஆஜர் இல்லை. அவர் தரப்பில் மனுத்தாக்கல் செய்யபட்டு, மனு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் காசாங்கோட்டையில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் மூன்றரை வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மாலை 06.00 மணியளவில், நான் எனது அம்மா வீட்டில் நெல் அவித்துக்கொண்டு இருந்தேன். எனது அக்கா மகளை விட்டு மாடியை கூட்டச் சொன்னேன். எனது மகனும், மகளும் மாடியில் உள்ள கட்டையில் உள்ள மண்ணை தள்ளவிட்டபோது, எதிரி ராணி சத்தம்போட்டார். அதற்கு நான் சென்று சின்னப்பிள்ளைகள் தவறுதலாக செய்ததற்கு, ஏன் இப்படி திட்டுறீங்க என்று நான் கேட்டேன். அதற்கு ராணியும் நானும் வாய் வார்த்தை பேசிக்கொண்டிருந்தபோது, ராணியின் மகள் கலையரசி செங்கல்லை எடுத்து என் மீது எறிந்ததில், முன் பற்கள் இரண்டு உடைந்துவிட்டது. ஒரு பல் ஆட்ட நிலையில் இருந்தது. அதனால் நான் தற்போது 6 பற்கள் கட்டியுள்ளேன். இரத்தம் அதிகமாக போனது. ராணி, கலாவதி, கலையரசி, ராஜசேகர் ஆகிய நால்வரும் கல்லை எடுத்து என் மேல் தொடர்ந்து எறிந்துக்கொண்டிருந்தார்கள். நான் என் கணவருக்கு போன் செய்து, வரச்சொல்லி விக்கிரமங்கலம் காவல் நிலையம் சென்று, எனக்கு தெரிந்த ஒரு நபரை வைத்து புகாரை எழுதி நான்தான் கையெழுத்திட்டேன். அதில் சங்கதிகள் அனைத்தும் நான் கூறியவைதான். **( எனது கையெழுத்துடன் கூறிய புகார் அதசாஆ.1 ஆகும்).** அரசு மருத்துவமனையில் 3 நாட்கள்

உள்நோயாளியாக சிகிச்சை பெற்று, பின் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு எழுதப் படிக்க சுமாராகத்தான் தெரியும். நான் 9ம்வகுப்பு வரை படித்துள்ளேன். புகாரில் எழுதியுள்ள சங்கதிகளை நான்தான் சொன்னேன். நான் கொடுத்த புகாரில் ராணி மகள் கலையரசி கல்லால் அடித்ததில், 3 பற்கள் உடைந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு வேறு காயங்கள் எதுவும் இல்லை. நான் அரியலூர் அரசு மருத்துவமனையில் வைத்து கையெழுத்து செய்து கொடுத்தேன். அப்போது நான் சுயநினைவுடன்தான் இருந்தேன். நான் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்று சேர்ந்தபோது, நான் தான் வாக்குமூலம் கொடுத்தேன். அப்போது நான் சுயநினைவுடன்தான் இருந்தேன். அப்போது நான்கு பேரும் செங்கல்லால் மட்டும்தான் அடித்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் மீது எதிரிகள் 2 வருடத்திற்கு முன்பு வழக்கு கொடுத்து, அதில் சமாதானமாக சென்றுவிட்டோமா என்றால் எனக்கும் அதற்கும் எந்த சம்மந்தமும் இல்லை. எனது வீட்டு மாடியில் இருந்து பார்த்தால் எதிரிகள் வீட்டில் கீழே சமையல் செய்துக்கொண்டிருப்பது தெரியும் என்றால் சரிதான்.

எனது பிள்ளைகள் மாடியில் கூட்டித்தள்ளும்போது, அவர்கள் சமைத்த உணவில் மண் பட்டுவிட்டது என்றால் சரிதான். ராணிக்கும் எனக்கும் வாய் சண்டை நடந்தது என்றால் சரிதான். நான் பேசிக்கொண்டிருக்கும்போது, மாடி படிக்கட்டில் இருந்து தவறி விழுந்த என் பற்கள் உடைந்துவிட்டது என்றும், அதை பயன்படுத்தி எதிரிகள் மீது தவறாக வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த சம்பவத்திற்கு முன்பாக எதிரிகளுடன் பேச்சு வார்த்தை இல்லை, மற்றபடி பெரிய விரோதம் எதுவுமில்லை என்றால் சரிதான். அதனால் எதிரிகள் கல்லை எடுத்து என்னை அடிக்கவேண்டிய அவசியமில்லை என்று சொன்னால் சரியல்ல. போலீசார் நான் புகார் கொடுத்து மறுநாள் மருத்துவமனையில் விசாரித்தார்கள். போலீசார் விசாரணையிலும் கலையரசி கல்லை எடுத்து அடித்ததால்தான் பற்கள் உடைந்துவிட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலீசாரிடம் அடித்த கல்லை காட்டினேனா என்றால் போலீசார் எங்கள் வீட்டிற்கு வரவில்லை. காவல் நிலையத்திற்கும் கல்லை எடுத்துச் சென்று காட்டவில்லை என்றால் சரிதான்.

உண்மையில் எதிரிகள் கல்லால் அடித்திருந்தால் நான் போலீசாரிடம் அந்தக் கல்லை எடுத்துக்காட்டியிருப்பேன் என்றால் சரியல்ல. எதிரிகள் என்னை அடிக்கவில்லை என்றும், அவர்கள் மீது உள்ள முன்

விரோதத்தால் நான் அவர்கள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒம்/-இரா.இராஜசேகரன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,
ஜெயங்கொண்டம்.